
ஆண்டு சந்தா ரூ. 60/-

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 5 இதழ் : 6 ஏப்ரல் 2009





# சுதேச ஊழியர் சாட்சி
## சகோ. டேடு ராட்டுவா

என்னுடைய பெயர் டேடு ராட்டுவா. நான் குஜராத் மாநிலம், சோட்டா உதய்பூர் தாலுகாவில் சன்னடா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எங்கள் கிராம மக்கள் கொள்ளையடிப்பதில் பெயர் பெற்றவர்கள். மேலும் இவர்கள் வீட்டிற்கு வீடு பில்லிசூனியம் செய்பவர்கள், காரணமின்றி ஒருவருக்கொருவர் சண்டை போடுவார்கள். இப்படிப்பட்ட கிராமத்தில் நானும் ஒரு மந்திரவாதியாக இருந்தேன். மக்களை ஏமாற்றி ஆடு, கோழி, பொருட்கள் மற்றும் பணம் பெற்று வந்தேன். ஆனால் எனது வீட்டிலோ மிகவும் வேதனையான வாழ்க்கைதான், எனது மனைவிக்கு வயிற்றில் ஒரு கட்டி வந்து 10 ஆண்டுகளாக நீங்காமல் வேதனை தந்தது. எனது மகனும் வியாதிப்பட்டு கை, கால் செயலிழந்து மரித்துப்போகும் நிலைமைக்குச் சென்றுவிட்டான். இவர்களைக் காப்பாற்ற மந்திரக்கிரியைகளை எனது ஊரிலும் வெளி ஊர்களிலும் சென்று செய்து வந்தேன். ஆனால் எந்த விடுதலையும் கிடைக்கவில்லை. சமாதானத்தை இழந்தவனாக காணப்பட்டேன். இந்த நேரத்தில் சன்னடா கிராமத்திற்கு ஷாலோம் ஊழியர் ஒருவர் வந்தார். அவரைச் சந்தித்தேன். அவர் எனக்கு இயேசுவைக் குறித்து கூறி எனக்காக ஜெபித்தார். ஜெபத்தின் மூலம் எனது வீட்டில் அனைவரும் வியாதியிலிருந்து சுகம் பெற்றார்கள். மனைவியின் வயிற்றிலிருந்த 10 வருட கட்டி மறைந்தது. அல்லேலூயா ! உடனே இயேசுதான் உண்மையான தெய்வம் என்று அறிக்கையிட்டு மந்திர பொருட்களை தூக்கி எறிந்துவிட்டு இயேசுவை முழு குடும்பமாக ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து ஆராதனை நடத்துவதற்காக என்னுடைய வீட்டை திறந்து கொடுத்தேன். எங்கள் குடும்பத்திலும், வீட்டிலும் தெய்வீக சமாதானம் பிறந்தது. பாவத்திலிருந்து விடுதலைப் பெற்று பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். பின்பு ஆலயம் கட்டுவதற்காக என்னுடைய நிலத்தில் ஒரு பகுதியை தேவனுக்கென்று காணிக்கையாகக் கொடுத்தேன். இந்த நிலத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக கிராம ஆலயம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நான் நான்கு ஆண்டுகளாக இந்த சபையில் மூப்பராக இருந்து ஊழியம் செய்தேன். தற்போது ஹாப்பர்பூரா என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வருகின்றேன். எனக்காகவும், எனது ஜனம் இரட்சிக்கப்படவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குவோர் : **Fr. S.J. Berchmans Jeba Thottam Trust**, Kalaiyarkoil.



## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

ஆண்டவரும் இரட்சகருமான இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பு வாழ்த்துக்கள்.

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்முடன் இருந்து நம்மை வழிநடத்தியமைக்காக தேவனை துதிக்கிறோம். உங்கள் பாரமுள்ள ஜெபங்கள், தியாகமான காணிக்கைகள் மூலமாக பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் பணிகள் வளர்ந்து வருகிறது. மார்ச் 1–ம் தேதியன்று 10–ம் வகுப்பு 12–ம் வகுப்பு தேர்வு எழுதும் 220 பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு ஆயத்த ஜெபக்கூடுகை நடைபெற்றது. மேலும் ஷாலோம் ஆதரவாளர்களாகிய உங்கள் பிள்ளைகள் தேர்வுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுத்துள்ளோம். தேவன் வெற்றியை தருவார். அனைத்து பீல் மக்கள் சபைகளிலும் 40 நாட்கள் உபவாச ஜெபங்கள் தேசத்திற்காக, சபை எழுப்புதலுக்காக, சொந்த பீல் மக்கள் இரட்சிப்பிற்காக, தாங்கும் சபைக்காக, ஊழியர்களுக்காக, குடும்பங்களின் நல் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்து வருகிறார்கள். 03.03.2009 அன்று 24 மணிநேர உபவாச ஜெப நாளாக ஆசரிக்கப்பட்டது.

இவ்வருடம் கர்த்தருக்குச் சித்தமானால் குறைந்தது 50 கிராமங்களில் ஆலய கட்டுமானப்பணி நடைபெற உள்ளது. தடைகள் ஏதும் வராதபடி தேவன் வழிநடத்த ஜெபியுங்கள். மேலும் VBS 20000 பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கு நடத்தப்பட வேண்டும். அதற்கான ஆயத்தங்களுக்காக, பயிற்சிக்காக, தேவையான நிதியுதவி ரூ.2லட்சம் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

தேசத்தில் நடைபெற உள்ள National Prayer Alliance தேர்தலுக்காக தினமும் 10 நிமிடங்களாவது ஜெபியுங்கள். (டாக்டர். பால்தினகரன் அவர்கள் மற்றும் போதகர். D.மோகன் N.L.A.G. ) அவர்கள் தலைமையில் நடைபெறும் 72 மணிநேர உபவாச ஜெபக்கூடுகை தாகோத்தில் வைத்து ஏப்ரல் 1 முதல் 4–ம் தேதி வரை நடைபெற உள்ளது. நம் ஷாலோம் சபை ஊழியர்கள் மற்றும் வடஇந்திய சபைகள் இணைந்து செயல்படுகிறார்கள். தடையின்றி நடைபெற ஜெபியுங்கள்.

**கர்த்தர் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்.**
**(ஆதி 24 : 1)**

தேவ கிருபை உங்களுடன் இருப்பதாக.

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,



வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# தாம் சொன்னபடியே இயேசு உயிர்த்தெழுந்தார்

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**



***மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.*** இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை உலகமெங்கும் திருச்சபைகள் சந்தோஷமாக கொண்டாடுவதைக் காட்டிலும் மிக அதிகமான சந்தோஷத்துடன் கொண்டாட வேண்டிய பண்டிகை ஈஸ்டர் திருநாளாகும். ஏனெனில் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியாம் இயேசு கிறிஸ்து மரித்து மூன்றாம் நாள் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். ஆகையால் நமக்கு உண்டான பாக்கியங்கள் என்ன? என்பதை வேதத்தில் ஆராய்வோம்.

**<u>1. உயிர்த்தெழுத–ன் நம்பிக்கையை நமக்கு தந்த இயேசு</u>**

வேதம் சொல்லுகிறது **"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று"** விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார். (1தெச. 4:14) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டுவிட்டு பாவமன்னிப்பைப் பெற்றவர்கள் கல்வாரி ரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள், இரட்சிப்பு என்னும் புது வாழ்வு பெற்றவர்கள் அவர்கள் மரித்தாலும் இயேசு கிறிஸ்துவுக்குள் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். உயிரோடு இருப்பவர்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போகப்படுவோம். இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். இந்த நம்பிக்கை கிறிஸ்தவனாக பிறந்ததினால் கிடைப்பதல்ல. வேதம் சொல்லுகிறது, ஆதலால் அவருடைய மரணத்தின் சாய–ல் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுத–ன் சாய–ல் இணைக்கப்பட்டிருப்போம். (ரோமர் 6:5.)

அருடைய மரணத்தின் சாய–ல் நாம் இணைக்கப்படவேண்டும். அதாவது நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். நம்முடைய

பாவங்களை அறிக்கை செய்து, விட்டுவிட்டு பாவத்திற்கு செத்தவர்களாய் ஒப்புக்கொடுக்கும்போது உயிர்த்தெழுத–ன் பாக்கியத்திற்கு தேவன் நம்மைத் தகுதிப்படுத்துவார். அவர் வருகையில் நாமும் எடுத்துக்கொள்ளப்படுவோம். இயேசு உயிர்த்தெழுந்தார், நமக்கும் அந்த பாக்கியத்தை அவர் மரணத்தின் மூலமாக தந்துள்ளார். அல்லேலூயா!

## 1. பாவத்தி–ருந்து விடுவிக்க உயிர்த்தெழுந்த இயசே :–

உயிர்த்தெழுந்த இயேசு அப்போஸ்தலருக்கும், தம் சீஷர்களுக்கும் தம்மை வெளிப்படுத்தினார். இயேசுவின் சீஷர்கள் அவர் மரணத்திற்குப் பின்பு மிகவும் பயந்திருந்தார்கள். **“வாரத்தின் முதல்நாளாகிய அன்றைய தினம் சாயாங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம்”** என்றார். (யோவான் 20:19.) மேலும் 26–ம் வசனத்தில் மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். வசனங்களைப் பார்க்கும்போது சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்திருந்தனர். அவர்களுக்கு மனிதர்களை குறித்த பயம் மற்றும் அதிகாரங்களைக் குறித்த பயம், மேலும் தங்களையும் இயேசுவைப் போல் கொன்றுவிடுவார்களோ என்ற மரணபயம் ஆட்கொண்டிருந்தது. ஆகவே பூட்டிய கதவுகள் மத்தியில் உயிர்த்தெழுந்த இயேசு உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று பயங்களை நீக்கி சமாதானம் கொடுத்தார். தோமாவுக்கு உண்டான சந்தேகத்தை தன்னுடை விலாவில் கைகளைப்போட்டு காயங்களைத் தொட்டு பார்த்து உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசிக்க வைத்தார். அவர்கள் மீது ஊதி பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள் என்று உன்னத பெலனையும் கொடுத்தார். அவர்களுக்குள் இருந்த மனிதபயம், அதிகாரங்களின் மீதான பயம், மரணபயம், எதிர்காலத்தைக் குறித்த பயம்

எல்லாவற்றையும் நீக்கி புதிய நம்பிக்கையைக் கொடுத்து **“உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்”** என்றார். (மத்தேயு 28:20.)

**3. உயிர்த்தெழுத—ன் நம்பிக்கையை நமக்கு தந்த இயேசு**

மிகவும் பயந்து கலக்கத்தோடு இருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்ணாரக் கண்ட பின்பு, அவர்களுக்குள் இருந்த மரணபயம் மனிதர்களைக் குறித்த பயம் எல்லாம் நீங்கியது. பேதுரு ஒரு வேலைக்காரியிடம் இயேசுவை மறுத—த்தார். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்த பின்பு மரித்தோரி—ருந்து உயிர்த்தெழுந்தவர் இயேசுவே என்று பலத்த சாட்சிக் கொடுத்தார். தன்னுடைய எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று கலங்கி தான் மட்டும் அல்லாமல், மற்றவர்களையும் மீன்பிடிக்க அழைத்துச் சென்றான் சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: **மீன்பிடிக்கப் போகிறேன்** என்றான். அதற்கு அவர்கள் நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திதியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. (யோவான் 21:3) ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து திபேரியா கடற்கரையில் தன்னை வெளிப்படுத்தி என்னை நேசிக்கிறாயா? என்று பேதுருவோடு தன் இதய பாரத்தை வெளிப்படுத்தனிார். உயிர்த்தெழுந்த இயேசுவை நேசிக்க ஒப்புக்கொடுத்த பேதுரு எல்லா சீஷர்களையும், ஒருங்கிணைத்து ஜெபத்திலே தரித்திருந்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அந்நாட்களில் சீஷர்களில் ஏறக்குறை நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று..... (அப். 1:15) ஆவிக்குரிய வழிகாட்டும் தலைவனாக உருதியாக நின்றார்.

இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்களாயிருக்கிறோம். (அப். 2:32)

ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன்

மரித்தோரி–ருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (அப். 3:15)

"உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரி–ருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும் இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது". (அப். 4:10)

"கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிக்கொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது". (அப். 4:33)

தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப். 5:42)

"சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்". (அப். 8:4)

ஆதி அப்போஸ்தலர் சபையில் சீஷர்களும், திருச்சபை விசுவாசிகளும், உயிர்த்தெழுந்த இயேசுவை ஆண்டவர் என்று சாட்சிக் கொடுத்தார். இயேசுவின் நாமத்திற்காக தாங்கள் அவமானம் அடைவதற்கு பாத்திரவான்களாக எண்ணினார்கள். நாம் உயிர்த்தெழுந்த இயேசுவை சபையில் கொண்டாடுவது மட்டுமல்லாமல், நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு ஜாதி மக்களுக்கும் சாட்சியாய் அறிவிப்போம். எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரி–ருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது;

அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.

***நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் - இயேசு***

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

மாணவனின் பெயர் : **அவினாஷ் S. டாமோர்**
தகப்பனார் பெயர் : சர்தார் டாமோர்
தாயார் பெயர் : ஜீமா டாமோர்
பிறந்த நாள் : 15.03.2002
படிக்கும் வகுப்பு : LKG
சொந்த ஊரின் பெயர் : டுங்கர்பீத்
தாலுகா : ஜாபுவா
மாவட்டம் : ஜாபுவா
மாநிலம் : மத்தியப்பிரதேசம்
தங்கி படிக்கும் விடுதி : Home



**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

அவினாஷ் டாமோரின் தகப்பனார் கத்தோ–க்கக் குடும்பத்தில் பிறந்தவர். சிலை வணக்கம் உடையவராக இருந்தார். இவர் குடும்பத்தில் சமாதானம் இல்லாமல் இருந்தது. அவினாஷின் பாட்டிக்கு திடீரென இரண்டு கண்களும் தெரியாமல் போய்விட்டது, இதனால் இவர் மிகவும் வேதனைப்பட்டார். இவனுடைய தகப்பனார் அநேக இடங்களுக்குக் கூட்டிச் சென்று மருத்துவம் பார்த்து அதிக பணம் செலவு செய்தார், ஆனாலும் சுகம் கிடைக்கவில்லை. 1990ஆம் ஆண்டு பான்ஸ்வாடாவில் நடந்த சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டபோது தேவன் அவனுடைய பாட்டிக்கு கண் பார்வையைக் கொடுத்து அற்புதம் செய்தார்.

இதைக் கண்ட இவர் குடும்பத்தார் அனைவரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். கர்த்தருடைய அழைப்பின்படி தன் சொந்த ஜனங்கள் இயேசுவை அறிய வேண்டும் என அவினாஷின் தந்தை சர்தார் டாமோர் தன்னை தேவனுடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**


இவன் நன்றாக படிக்கின்றான். மேலும் நன்றாக விளையாடுவான்.

**ஜெபியுங்கள்:-**

நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Mrs. Metilda Jebaseeli,** Tirunelveli.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 270 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)



# பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதாகமத் திட்டம் (Bible Project)

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும். இந்த ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள 1000 விசுவாசிகளுக்கு 1000 குஜராத்தி வேதாகமங்களும், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலுள்ள 5000 விசுவாசிகளுக்கு 5000 ஹிந்தி வேதாகமங்களும் மொத்தம் 6000 வேதாகமங்கள் (ஹிந்தி 5000, குஜராத்தி 1000) தேவைப்படுகிறது.

அகமதாபாத், இந்திய வேதாகமச் சங்கத்தி–ருந்து நமக்கு ஒரு வேதாகமம் ரூ. 80/– என்ற விலைக்கு தர இசைந்துள்ளார்கள். ஆகவே இந்தத் திட்டத்திற்காக (6000 X ரூ. 80) **ரூ. 4,80,000/–** தேவைப்படுகிறது. இந்த நிதித் தேவை சந்திக்கப்படும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். அதற்கான தொகையை SHARING LOVE MISSION என்ற பெயரில் D.D. அல்லது Cheque மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவதிட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!


## எங்களுடன் தொடர்பு கொள்ள

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Bro. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

## பணித்தள சாட்சிகள்

### தேவனுக்கே மகிமை

**சகோ. சுரேஷ் ஹத்திலா தகோத் (குஜராத்)**

சுக்தேவ்தாகா கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு மிகவும் அதிகமாக காணப்பட்டது. இதனால் இரண்டு வாரங்கள் கூட்டம் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே நாங்கள் குடும்பமாக விசுவாசிகளுடன் இணைந்து உபவாசித்து ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு எதிர்ப்புகளை மாற்றி கூட்டம் நடத்த வாசலைத் திறந்து தந்தார்.

**சகோ. சந்து டாமோர் ஹட்மத்கூட்டா (குஜராத்)**

பார்டன்பாய் பாபோர் என்ற சகோதரன் 7 வருடங்களாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் வியாதிப்பட்டு மிகவும் பெலவீனமடைந்தார். கண்களில் எப்போதும் தண்ணீர் வடிந்து கெண்டே இருந்தது. இந்த சகோதரனுக்காக சபையில் நாங்கள் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. எத்தர்சிங் தாட்கட் தலயா (குஜராத்)**

முஷாபாய் என்ற குழந்தை வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் பெலவீனமாக இருந்தது. தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னிடம் இந்தக் குழந்தைக்காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். நான் விசுவாசத்தோடு இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது தேவன் குழந்தைக்கு அற்புதமாக பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மடியா M. சங்காடா தஸ்லா (குஜராத்)**

கனாபேன் என்ற சகோதரி தனக்கு பெண் குழந்தை வேண்டும் என்று விசுவாசத்துடன் ஜெபித்து வந்தாள். தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக பெண் குழந்தையைக் கொடுத்தார். ஆனால் அந்தக் குழந்தை மரித்துப்போகும் நிலைமையில் காணப்பட்டது. டாக்டர்கள் மரித்துவிடும் என்று கூறிவிட்டார்கள். அந்த குழந்தைக்காக நாங்கள் பாரத்தோடு ஜெபித்தோம். 5 மணி நேரத்திற்கு பின்பு சுவாசம் வந்தது. மிகவும் மோசமான நிலைமையிருந்து தேவன் அற்புதமாக குழந்தைக்கு ஜீவனைக் கொடுத்து குடும்பத்தை ஆசீர்வதித்தார்.

**சகோ. கல்லு K. டின்டோ தாத்கா (இராஜஸ்தான்)**

கான்ச்பாடா கிராமத்தைச் சேர்ந்த தோக்காபாய் என்ற சகோதரனுக்கு சரீரத்தில் வியாதியும், பெலவீனமும் இருந்தது. இடுப்புக்கு கீழே கால்கள் செயல்படாமல் இருந்தது. மருத்துவமனைகளுக்குச் சென்று ரூ.20,000 வரை செலவழித்து மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக இவருடைய சகோதரன் வந்து என்னை ஜெபிக்கும்படி அழைத்தார். நான் அந்த சகோதரனின் வீட்டிற்குச் சென்று இயேசுவின் நாமத்தில் ஜெபித்தவுடன் கட்டி–ல் படுத்திருந்தவர் எழும்பி உடகார ஆரம்பித்தார். மெதுவாக நடக்க ஆரம்பித்தார். தற்போது நன்றாக நடத்து சபைக்கு வருகிறார்.

**சகோ. பாவ்ஜி கராசியா குண்டா (இராஜஸ்தான்)**

வீர்சிங்பாய் என்ற சகோதரன் 3 மாதமாக அசுத்தாவியின் பிடியில் சிக்கி அவதிபட்டு வந்தார். பல மந்திரவாதிகளிடம் சென்று அதிக பணம் செலவழித்து மந்திரக்கிரியைகள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. கடைசியாக இவர் குடும்பத்திலுள்ளவர்கள் வேறு வழியின்றி ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் இயேசுவைப் பற்றிக் கூறி, நீங்கள் தேவனை விசுவாசித்தால் அவர் உங்களுக்கு விடுதலை கொடுப்பார் என்று கூறி அனைவரையும் உட்கார வைத்து ஜெபித்தேன். 2 நாட்களில் இவர் பூரண விடுதலையைப் பெற்றார்.

**சகோ. ரமேஷ் V. கனாவா** **கேட்பூர் (இராஜஸ்தான்)**

பெக்–பேன் என்ற சகோதரிக்கு குழந்தை இல்லாதிருந்தது. உண்டாகிற குழந்தை எல்லாம் அபாஷன் ஆகிவிடும். சபையார் இந்த சகோதரிக்காக விசுவாசித்து ஜெபித்ததில் தேவன் குழந்தை கர்ப்பந்தரிக்கும் கிருபையைத் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை. கர்ப்பபையில் குழந்தை இருக்கிறது. குழந்தை நிலைத்திருக்கவும் ஏற்ற வேலையில் சுகபிரசவத்தை தேவன் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**சகோ. லக்ஷ்மண்லால் கட்டாரா** **பட்டார் (இராஜஸ்தான்)**

பதூர்லால் என்ற 18 வயது சகோதரனுக்கு அநேக வருடங்களாக கா–ல் பயங்கர எரிச்சலாக இருந்தது. அநேக மருந்துகள் சாப்பிட்டும், பல மந்திரவாதிகளிடம் சென்று மந்திரங்கள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக இந்த சகோதரன் ஆலயத்திற்கு வந்து விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. காளுகுண்டியா** **கேடி (மத்தியபிரதேசம்)**

டாமாபாய் என்ற சகோதரர் திடீரென மயங்கி விழுந்து விட்டார். இவரை அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் பார்த்து விட்டு இவர் மரித்துவிட்டார் என்று கூறிவிட்டார்கள். இவர் குடும்பத்திலுள்ளவர்கள் என்னிடம் தொலைபேசியில் ஜெபிக்கும்படி கூறினார்கள். நான் ஆவியில் நிறைந்து பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு மயக்க நிலையி–ருந்த சகோதரரை எழுப்பினார்.

**சகோ. தெர்சிங் டாமோர்** **தெத்தம் பாடி (மத்தியபிரதேசம்)**

நகட்டியா என்ற சகோதரன் சூரத் பட்டணத்திற்கு வேலைக்கு சென்ற இடத்தில் டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் மருத்துவம் செய்தும் குணமாகவில்லை. அவரிடம் ஒரு விசுவாச சகோதரன் நீங்கள் ஆலயத்திற்கு சென்று ஜெபித்தால் சுகம் கிடைக்கும் என்று கூறினார். ஆனால் இந்த சகோதரனோ, மருத்துவர்கள் செய்ய முடியாததை இவர்கள் என்ன முடியும் எனக் கூறி விசுவாசிக்க மறுத்துவிட்டார். நாளடைவில் மிகவும் பெலவீனப்பட்டார். கடைசியாக வேறு வழியின்றி ஆலயத்திற்கு வந்தார். நானும் சபையின் விசுவாசிகளும் இணைந்து பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் கேட்டு அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. ரமேஷ் புரியா** **காக்ரதாரா (மத்தியபிரதேசம்)**

ராமுபாய் என்றச் கோதரனின் மகள் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். இதனால் கை, கால்களில் அதிகமான வீக்கம் ஏற்பட்டது. மருத்துவமனைக்கும், மந்திரவாதிகளிடம் கொண்டு சென்றும் சுகம் கிடைக்காமல் பிள்ளை மரிக்கக் கூடிய நிலைக்குச் சென்று விட்டாள். இறுதியாக என்னை ஜெபிக்கும்படி அழைத்தார்கள். நான் ஜெபிக்கச் சென்றபோது சிறுநீர் கழிக்க கூட அந்தப் பிள்ளையை தூக்கி தான் சென்றார்கள், அந்த நிலையைப் பார்த்து நான் மிகவும் பாரத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அற்புத சுகத்தைக் கொடுத்தார். கை, கால்களின் வீக்கம் நீங்கி பூரண சுகத்துடன் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் நடந்தே ஞாயிறு ஆராதனைக்கு சபைக்கு வந்து தேவனை மகிமைப்படுத்தினாள்.

**சகோ. பாதுர்சிங் பாரியா** **ஜாராதாபூர் (மத்தியபிரதேசம்)**

ராஜீபாய் என்ற சகோதரனுடைய குழந்தைக்கு 5 வயதாகியும் கால்கள் நடக்க முடியாமல் இருந்தது. ரூ.15,000 வரை செலவழித்து அநேக மந்திரக்கிரியைகள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக இவருடைய சகோதரி இயேசுவைப்பற்றிக் கூறி ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் அந்தச் சிறுவனின் கால்களில் ஜெப எண்ணெய்ப்பூசி விசுவாசத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக நடக்கும்படி கிருபை செய்தார்.

# உயிர்த்தெழுத-ன் மூலம் நம்பிக்கை

**- நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"** என்று லாசருவின் கல்லறையருகே கூறிய இயேசுவின் உயிர்த்தெழுதல் மனுக்குலம் அனைத்துக்கும் வாழ்வில் ஒரு நோக்கத்தையும், நம்பிக்கையையும் அளிக்கிறது.

## நமது வாழ்வின் நோக்கம்

இன்று பலர் பணம் சம்பாதிப்பதையே தங்கள் வாழ்வின் நோக்கமாகக் கொண்டுள்ளனர். மற்றும் சிலர் பட்டங்கள் பெறுவதிலும், அறிவைப் பெருக்கிக் கொள்வதிலும் தங்கள் காலத்தை கழிக்கின்றனர். இன்னும் சிலர் பதவிகளை நாடி அதற்காக எதையும் செய்யத் துணிந்து விட்டனர். சுய நலத்தில் நாட்டமுடையோர் தேவ பக்தியின் முகமூடிகளையும் அணிந்து கொள்ளத் தயங்குவதில்லை. இந்த நிலையில் கிறிஸ்துவுக்காக வாழத் துடிப்பவர்கள் தங்களை கிறிஸ்துவுடைய மரணத்தின் சாய–ல் இணைக்கப்பட்டவர்களாகக் கருதுகிறார்கள். இவர்கள் உலகத்தின் மேன்மைகளையும், பதவிகளையும் , பட்டங்களையும் , ஆசாபாசங்களையும், உல்லாச வாழ்க்கை முறைகளையும் துச்சமென்று எண்ணி தங்களை கிறிஸ்துவின் உயிர்த்தெழுத–ன் சாய–ல் இணைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுகிறார்கள். அவர்கள் உலகத்துக்கு மரித்து விட்டார்கள். அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. அவர்கள் பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியவன், வேண்டாதவன் என்ற எண்ணமே வருவதில்லை. கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வின் நோக்கம் வாழ்வினாலாகிலும், சாவினாலாகிலும் கிறிஸ்து மகிமைப்பட வேண்டும் என்பதே .

## நமது நிகழ்கால நம்பிக்கை

இயேசுவை மரித்தோரி–ருந்து எழுப்பினவருடைய ஆவி நம்மில்

வாசமாயிருக்கிறதால், கிறிஸ்துவை மரித்தோரி–ருந்து எழுப்பினவர் நம்மில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான இந்த சரீரத்தில் பாவம் ஆளுகை செய்யாதபடி நம் சரீரங்களை உயிர்ப்பிக்கிறார். ஜென்ம சுபாவமாகிய மாம்ச சிந்தையை எடுத்துப்போட்டு ஆவியின் சிந்தையை நமக்குள் கொடுக்கிறார். ஆகவே நாம் பாவத்துக்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்கிறோம். நமது அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், மரித்தோரி–ருந்து எழுந்திருக்கிறவர்களாகக் கருதி, நம் அவயவங்களை நீதிக்குரிய அவயவங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறோம். உயிர்த்தெழுத–ன் வல்லமை நம்மை பாவம் மரணம் என்ற பிரமாணங்களி–ருந்து விடுதலையாக்கியிருக்கிறது. நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். எனவே பாவம் நம்மை மேற்கொள்ளமாட்டாது.

## நமது எதிர்கால நம்பிக்கை

சரீர மரணம் வாழ்க்கையின் முடிவல்ல, அது நித்திய வாழ்வுக்குள் செல்லும் வாசல். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்கள் கிரியைகள் அவர்களோடே கூடப்போகும்". இது பரலோகத்தில் உண்டான சத்தம். ஆவியானவர் ஜிஆம்ஜி என்று கூறி ஆமோதிக்கிறார். நாம் வானத்துக்குரியவர்கள் இந்த மண்ணுக்குரியவர்கள் அல்ல. மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருப்பது போல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்ளுவோம். தேவ குமாரனின் எக்காளம் தொனிக்கும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தோர் அனைவரும் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். அழிவுள்ளதாகிய இந்த சரீரம் அழியாமையையும், சாவுக்கேதுவான இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும். அப்போது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்ற தேவனுடைய வார்த்தை நிறைவேறும்.

மரித்தேன், ஆனாலும் , இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென் என்ற வார்த்தை உயிர்த்தெழுந்த உலக இரட்சகரின் வெற்றி முழக்கம் எதிரொ–த்துக் கொண்டே இருக்கும்.

சகோ. J. வின்ஸ்டன், தூத்துக்குடி

## சுவிசேஷப் பணியை விரைவுப்படுத்துவோம்...



தேவன் நமக்கு ஊழியம் செய்யும்படியாக, பீல் மக்கள் வாழும் பிராந்தியங்களைத் தந்துள்ளார். நாம் அனைவரும் அறிந்தபடி பீல் மக்கள் வாழும் கிராமங்கள் சரியான போக்குவரத்து வசதி, மின் வசதி, மருத்துவ வசதி, போன்ற அடிப்படை வசதிகள் கூட சரிவர கிடைக்கப்பெறாத பகுதிகளாகும். பல கிராமங்களில் 5 கி.மீ. முதல் 10 கீ.மீ தூரம் வரை நடந்தே வந்து எப்பொழுதாவது வரும் ஜீப் போன்ற வாகனங்களைப் பிடித்து பிரயாணம் செய்கிறார்கள். அதுபோல பீல் ஆதிவாசி மக்களுடைய வீடுகள் நமது ஊர்களில் உள்ள காலனி அமைப்பைப் போல ஒரே இடத்தில் அனைத்து வீடுகளும் இருப்பதில்லை. அவரவர் தங்கள் வயல் நிலங்களில் வீட்டைக் கட்டியிருப்பார்கள். ஆகவே ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே சற்று இடைவெளி இருக்கும். ஆகவே நம்முடைய சுதேச ஊழியர்கள் விசுவாசிகளைச் சந்திக்கவும், அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்கவும் பல கீ.மீ தூரம் நடந்தே செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. நம்முடைய சுதேச ஊழியர்களில் பலருக்கு **"சைக்கிள்"** கூட கிடையாது. குறிப்பாக கடந்த ஆண்டில் புதிதாக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து பயிற்சி பெற்றுள்ள 55 சுதேச ஊழியர்களுக்கு மிகவும் அவசரமாக, அவசியமாக **"சைக்கிள்கள்"** தேவைப்படுகிறது. இந்த புதிய ஆண்டில் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, அல்லது சபையின் சார்பிலோ ரூ. 2500/– மதிப்பில் சைக்கிள் வாங்கிக் கொடுக்க முன்வரும்படி அன்புடன் உங்களை அழைக்கிறோம்.



**"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

– இயேசு கிறிஸ்து



அண்மையில் பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களுக்கு சுவிஷேசப் பணியை விரைவுப்படுத்த பங்காளர்கள் மூலம் வழங்கப்பட்ட சைக்கிள்களுடன் நமது சுதேச ஊழியர்கள்

## Pr. ஏசுதாஸ் (A.G. சபை, திருவட்டார்), Pr. ஆமோஸ் (A.G. சபை, மார்த்தாண்டம்) அவர்களின் பணித்தள வருகை...



முண்டத் (ம.பி.) ஆலய ஆராதனையில்



வேதாகம விநியோகம்



டெட்லா (ம.பி.) ஆலய அடிக்கல் நாட்டுதல்



முண்டத் (ம.பி.) பெரிய ஆலய அடிக்கல் நாட்டுதல்





பேடோ (இராஜஸ்தான்) ஆலயத்தில்...





சபை மக்களுக்காக ஜெபித்தல்

# பீல் சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனைகள்









## இயேசு நம்மோடு சபை, கருங்கல் (08.02.09)

## இயேசு நம்மோடு சபைகளுக்காக தேவனைத் துதிக்கிறோம்...

நம் ஷாலோம் மிஷனெரி ஊழியங்களை சபை பாகுபாடின்றி அனைத்து திருச்சபையாரும், போதகர்களும், சுவிசேஷகர்களும், ஸ்தாபகர்களும் தங்கள் ஜெபத்தினாலும் பொருளுதவிகளினாலும் தாங்கி வருகின்றார்கள். குறிப்பாக **தந்தை S.J. பெர்க்மான்ஸ்** அவர்கள் நிறுவிய **இயேசு நம்மோடு சபைகள்** மூலமாக மிஷனெரிகளைத் தாங்கி வருகிறார்கள்.

### தேவ கிருபையினால்...

ஜெபத்தோட்ட ஊழியங்கள் மூலமாக 5 மிஷனெரிகளையும்
இயேசு நம்மோடு சபை, கோவில்பட்டி (Pr. ரவிகோமஸ்) மூலமாக 1 மிஷனெரியையும்
இயேசு நம்மோடு சபை, சென்னை (Pr. சுவாமிதாஸ்) மூலமாக 1 மிஷனெரியையும்
இயேசு நம்மோடு சபை, மணப்பாறை (Pr. அலங்காரம்) மூலமாக 1 மிஷனெரியையும்
இயேசு நம்மோடு சபை, கருங்கல் (Pr. ஜேந்திரராஜ்) மூலமாக 1 மிஷனெரியையும்
இயேசு நம்மோடு சபை, ஒசூர் (Pr. L. ஜோசப் & சகோ. S. ஜார்ஜ்) மூலமாக 29 மிஷனெரிகளையும்
இயேசு நம்மோடு சபை, மதுரை (Pr.L.B. ஸ்டீபன்) மூலமாக 2 மிஷனெரிகளையும்
இயேசு நம்மோடு சபை, சென்னை (Pr. கிறிஸ்டோபர் மணி) மூலமாக 1 மிஷனெரியையும்
இயேசு நம்மோடு சபை, தூத்துக்குடி (Pr. ஜேசுராஜ்) மூலமாக 2 மிஷனெரிகளையும்
இயேசு நம்மோடு சபை, உண்ணாமலைகடை (Sis. கனகம்) மூலமாக 1 குழந்தையையும்

தாங்கி வருகிறார்கள். தாங்குகிற இயேசு நம்மோடு சபைகளுக்காக தேவனைத் துதிக்கிறோம். கர்த்தர்தாமே இவர்களையும், இவர்கள் சபைகளையும் ஆசீர்வதித்து உயர்த்துவாராக!

தேவ கிருபையால் 08.02.2009 அன்று கருங்கல் இயேசு நம்மோடு சபையில் ஞாயிறு ஆராதனையின் போது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. தினேஷ் சௌஹான்** (குனுஷ்யா, குஜராத்) அவர்களை **தந்தை S.J. பெர்க்மான்ஸ்** அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். மிஷனெரியை தாங்க முன் வந்த Pr. ஜேந்திரராஜ் அவர்களை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக! எங்களையும் ஷாலோம் ஊழியங்களையும் அதிகமாய் நேசிக்கும் **தந்தை S.J. பெர்க்மான்ஸ்** அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

## சகல பரிசுத்தவான்களின் ஆலயம், மதுரை






நமது ஷாலோம் ஊழியங்களுக்காக CSI சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தின் சார்பில் இதுவரை 4 மிஷனெரிகளைத் தாங்கி வருகிறார்கள்.

தேவ கிருபையால் 22.02.2009 அன்று மதுரை CSI சகல பரிசுத்தவான்களின் ஆலய ஞாயிறு ஆராதனையின் போது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. தினேஷ் கராசியா** (சந்லாபாடி, இராஜஸ்தான்) அவர்களை **Rev. V.T. ஜான்சன்** அவர்கள் தலைமையில் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். பிரதிஷ்டை ஆராதனையில் **சகோ. V. தேவதாஸ்** அவர்கள் மிஷனெரி செய்தி கொடுத்தார்கள். மிஷனெரியை தாங்கி வருகிற மதுரை, சகல பரிசுத்தவான்களின் ஆலயத்திற்காக தேவனைத் துதிக்கிறோம்.

# CBC (Children Bible Class)




கடந்த ஆண்டு சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட CBC புத்தகங்கள்





கடந்த ஆண்டு நடத்தப்பட்ட CBC பயிற்சியில்

கடந்த ஆண்டில் பணித்தளங்களில் நாம் நடத்திய CBC (Children Bible Class) மூலமாக ஆதிவாசி சிறுவர்கள் சுமார் 17,000 பேர் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதத்தில் 20,000 சிறுவர்களுக்கு 500 Center- ல் CBC நடத்தலாம் என ஜெபித்துத் தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம்.

***இதற்கான தேவைகள்:-***

1. 500 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்
2. 20,000 CBC புத்தகங்கள்.
3. Badge.
4. பாட்டுபுத்தகங்கள்
5. கலர் பென்சில்கள், பேனாக்கள்

CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 20,000 குழந்தைகளுக்கு ரூ. 2 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம். மேலும் இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் உள்ளத்தில் ஆண்டவர் பேசினால் இந்தத் திட்டத்திற்காக உதவ முன் வாருங்கள்...

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்" - இயேசு. மாற்கு 10:14

**போதகர். ஏசுதாசன்**
A.G. சபை திருவட்டார்,

**போதகர். ஆமோஸ்,**
A.G. சபை மார்த்தாண்டம்,

## *அவர்களின் பணித்தள வருகை*

நம் ஷாலோம் ஊழியங்களையும், பீல் மக்களையும் மிக அதிகமாக நேசிப்பவர்கள் போதகர். ஆமோஸ், A.G. சபை, மார்த்தாண்டம் அவர்கள் கடந்த ஆண்டு பணித்தளத்தை பார்வையிட்டு ஊழியம் செய்த போது இராஜஸ்தான், கோய்க்கா கிராமத்தில் உள்ள நம் ஷாலோம் மாணவர் விடுதியில் உள்ள 28 மாணவர்கள் சரியாக தங்குமிடம் இன்றி சிறிய ஆலயத்திற்குள் இருப்பதை கண்டு கவலையுற்று, தங்கள் சபையில் எடுத்து கூறி சபை மூலமாக ரூ. 70,000/– நிதி கொடுத்து கோய்காவில் ஷாலோம் ஆதிவாசி மாணவர் விடுதி ஒன்று 30 பிள்ளைகள் தங்குவதற்காக மிக அழகாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தேவ கிருபையால் போதகர். ஆமோஸ் மற்றும் அவர்கள் மகன் Mr. Jerome மற்றும் போதகர். ஏசுதாஸ் A.G. சபை, திருவட்டார் அவர்கள் மூவருமாக பணித்தளத்திற்கு மார்ச் 13–15 வரை வருகை தந்தார்கள்.

மார்ச் 13–ம் தேதியன்று இராஜஸ்தானில் பேடவ் கிராம ஆலயத்தில் கூடின மூப்பர்கள், ஆண்கள், பெண்களாக சபை நிறைந்து வந்தவர்களுக்கு ஆவியானவரின் அபிஷேகத்தையும் ஜெபத்தையும் பற்றி பிரசங்கித்து ஜெபித்த போது தேவன் அநேகரை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். அநேகர் அற்புத விடுதலையையும் பெற்றார்கள்.

மார்ச் 14–ம் தேதியன்று கோய்க்கா ஷாலோம் மாணவர் விடுதி கட்டிடத்தை போதகர். ஜேசுதாஸ் அவர்கள் ஜெபித்து, போதகர். ஆமோஸ் அவர்கள் திறந்து பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். அங்கு கூடியிருந்த மாணவர்கள் மற்றும் சபையார் அனைவருக்கும் **“தேவ ஜனத்திற்கு ஒப்பானவன் யார்”** என்ற தலைப்பில் சிறப்பு செய்தி கொடுத்தார்கள். ஆவியானவர் அற்புதமாய் அனைவரின் மேலும் இறங்கினார். மாணவர்களின் சிறப்புப் பாடல், நாடகம், வசனம் ஒப்பித்தல் அனைவரையும் கவர்ந்தது. வந்திருந்த மூன்று தேவதாசர்களுக்கும் பீல் ஆதிவாசி கலாச்சார வரவேற்பு கொடுக்கப்பட்டது.


தொடர்ந்து A.G. சபை மார்த்தாண்டம் மூலமாக தாங்கப்படும் ஊழியர் சகோ. கன்னுசிங் B பூரியா (மத்தியபிரதேசம்), A.G. சபை திருவட்டார் மூலமாக தாங்கப்படும் ஊழியர் சகோ. பத்தியா J. டின்டோடு (மத்தியபிரதேசம்), Federation of Pentecostal Churches மூலமாக தாங்கப்படும் ஊழியர் சகோ.பவுல் பார்கி (இராஜஸ்தான்) ஆகியோரை குடும்பங்களாக சந்தித்து ஜெபிக்க தேவன் கிருபை தந்தார். அவர்களுக்கு சிறப்புச் செய்தி ஏறெடுக்கப்பட்டு வெகுமதிகள் கொடுக்கப்பட்டது. கர்த்தருக்கு சித்தமானால் பத்தியா J. டின்டோடு ஊழியரின் கிராமமான கால்கண்டுவியில் ஆலயம் கட்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு 50 வேதாகமங்கள் (ரூ. 4000/–மதிப்பில்) A.G. சபை மார்த்தாண்டம் சார்பில் வழங்கப்பட்டது.

15.03.2009 ஞாயிற்று கிழமை அன்று போதகர். ஆமோஸ் அவர்கள் மத்தியபிரதேசம் அந்தர்வே–யா சபையை சந்தித்து ஜெபித்தார்கள். தொடர்ந்து முண்டத் கிராம சபையில் கூடிவந்த திரளான விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையை “தானியேலை” குறித்து பேசி ஜெபித்தார்கள். போதகர். ஏசுதாஸ் அவர்கள் மத்தியபிரதேசம் “பாடலா” கிராம சபையில் செய்தி கொடுத்தார்கள். ஊழியர். ரமேஷ் வாசுனியா சிறப்பு வரவேற்பு கொடுத்தார்கள். முண்டத் சபையார் மற்றும் ஊழியர் பால்முனியா சிறப்பு வரவேற்பு போதகர். ஆமோஸ் அவர்களுக்கும், ஜெரோமி அவர்களுக்கும் கொடுத்தார்கள்.

அதன் பின்பு முண்டத் கிராமத்தில் பெரிய சபை கட்டுவதற்கு (2 லட்சம்) செலவில் கட்டப்பட அடிக்கல் நாட்டுவிழா போதகர். ஆமோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதைப்போல 15 கீ.மீ தொலைவில் உள்ள தேதலா கிராமத்திற்கு சென்று அங்குள்ள 63 விசுவாசிகள் குடும்பங்களுக்காக ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. சபையார் ஆலய கட்டுமான பணிக்காக மனப்பூர்வமாக காணிக்கை தர முன்வந்தார்கள்.

3 நாட்களும் போதகர். ஆமோஸ், போதகர். ஏசுதாஸ் காலையில் தாகோத் அலுவலக ஜெபக்கூடுகையிலும், 15.03.09 ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழ் ஐக்கிய கூடுகையிலும் பங்கு பெற்று தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். இவர்களின் வருகை எல்லாருக்கும் உற்சாகத்தையும், தேவ அன்பையும் வெளிப்படுத்தியது. தேவனை துதித்து அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஷாலோம் ஊழிய பிரதிநிதிகள் தேவை!



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, 17 வருடங்களை ஊழியப்பாதையில் கடந்துவர தேவன் கிருபை தந்துள்ளார். பீல் மக்கள் திரளாக இரட்சிக்கப்பட, பீல் சுதேச ஊழியர்களை தந்து, ஆலயங்கள் கட்டப்பட கிருபை செய்துள்ளார். இம்மாபெரும் மிஷனெரிபணியில் நாங்கள் மோசேயை போல் முன்னாக நின்று ஊழியங்களை நடத்தி சென்றாலும் எங்களுடன் பணிபுரிய அநேக யோசுவாக்களை, பீல் சுதேச ஊழியர்களை தேசத்தை சுதந்தரிக்க தேவன் எழுப்பியுள்ளார். அதுபோல் ஜெபித்து, தாங்குகிற நீங்கள் தான் மிக முக்கியமானவர்கள். ஆரோன், ஊரைப்போல் நீங்கள் தாங்குவதின் நிமித்தமாக யேகோவா நிசி தேவன் மூலமாக வெற்றியை சுதந்தரிக்கிறோம்.

மேலும் ஆரோன், ஊரைப்போல் தாங்குகிற நீங்கள் எங்களுக்கு மிக முக்கியமானவர்கள். இப்பணியில் இன்னும் 36 மாதங்களில் 1000 ஊழியர்களை, 1000 சபைகளை ஸ்தாபிக்க மேலும் உங்கள் உதவியை நாடுகிறோம். உங்களில் பலர் மிஷனெரி பணி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை கொண்டவர்கள் என விசுவாசிக்கிறேன். நீங்கள் மிஷனெரியாக செல்லமுடியவில்லை ஆனாலும் ஆத்தும பாரத்துடன் ஜெபித்து தாங்கி வருகிறீர்கள். அதற்காக தேவனை துதிக்கிறேன். நீங்கள் இன்னும் மிக நெருக்கமாக, அதிகமாக சற்று மிஷனெரி பணியில் ஈடுபட, பீல் மக்கள் திரளாய் இரட்சிக்கப்பட உங்களை ஈடுபடுத்த இன்னும் சில வாய்ப்புகளை தருகிறோம்.

ஷாலோம் மிஷனெரி பணிக்கென நீங்கள் பிரதிநிதியாக உங்கள் பகுதியில் செயல்பட உங்களை அன்புடன் அழைக்கிறேன். நம் மிஷனெரி பணியை ஜெபித்து தாங்குவோர் உங்கள் பகுதியில் சில தேவபிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்தித்து மாதந்தோறும் அவர்கள் தரும் காணிக்கையை ஜெபித்து வாங்கி, சேர்த்து அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே உள்ள ஷாலோம் ஆதரவாளர் சொற்பமாக இருந்தாலும், இல்லையெனில் யாருமே இல்லாவிட்டாலும் நம் பணிகளை உங்களை சுற்றியுள்ள தேவ ஜனங்களுக்கு பத்திரிக்கை, பிரதிகள், VCD மூலமாக அறிமுகம்

செய்து பங்காளர்களாக இணைய வைத்து ஜெபித்து தாங்க முன் வரலாம். குறைந்தது ஐந்து பேர்களையோ பத்து பேர்களையோ அறிமுகம் செய்து காணிக்கைகளை மாதம் மாதா சேர்த்து அனுப்பலாம். இதுவரை நம் ஊழியத்திற்கு 40 பிரதிநிதிகள் காணிக்கை சேர்த்து அனுப்பி வருகிறார்கள்.

பிரதிநிதிகளாக செயல்பட முன்வருவோர் எங்களை தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். அப்படி முன்வரும் பிரதிநிதிகளுக்கு விளக்கங்களைக் கூறி ஷாலோம் பத்திரிக்கைகள் மற்றும் Phamlet, CD, VCD –இவைகளுடன் நீங்கள் காணிக்கை சேகரிக்க Recepit Book (3 Copies உடன்) அனுப்பிவைப்போம். அந்த பகுதியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஷாலோம் மாத பத்திரிக்கையில் உங்களை அறிமுகம் செய்து வைப்போம். நீங்கள் சேகரிக்கும் காணிக்கைகளை மாதந்தோறும் Cheque, DD மூலமாகவோ அல்லது வங்கியில் நேரடியாகவோ செலுத்தலாம். 2ம் ரசீது பிரதிகளை ஷாலோம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இது நீங்கள் பீல் மக்கள் இரட்சிப்பின் பணிக்காக செய்யும் மிகப்பெரிய உதவிமட்டுமல்ல மிஷனெரி பணியில் முக்கியப் பங்கு பெறுகின்றீர்கள். நீங்கள் சிறிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் மிஷனெரி ஆதரவாளர்கள், சிறப்பு நன்கொடையாளர்கள், ஆலயக்கட்டுமான பணி ஆதரவாளர்கள் ஆகியோரை தேவன் உங்களுக்கு கட்டாயம் தருவார். **“தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்.”** (மத். 10:41) என்ற அருள் நாதர் இயேசுகிறிஸ்துவின் வாக்கின்படி மிஷனெரி பணியை ஏற்றுக் பிரதிநிதியாக பணிபுரிய முன்வரும் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**“நம் தேசம் தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால் தேவபிள்ளைகள் அனைவரும் ஆளுக்கொரு கை ஆண்டவருக்காக வை”** என்ற சொல்–ன்படி செயல்படுவோம் முன்வாருங்கள் விபரங்களுக்கு ஷாலோம் தலைமை அலுவலகத்திலுள்ள அல்லது சகோ. சாம் குணசீலன் அவர்களையோ தொடர்பு கொள்ளுங்கள். (செல் : 093456–75468)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# ஜெபக் குறிப்புகள்



✞ ஒரு கோடி பீல் இன மக்களும் இரட்சிக்கப்படவும், 2020–க்குள் 7000 கிராமங்களில் 7000 ஊழியர்களும், சபைகளும் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்....

✞ 438 சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்விற்காகவும் தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள்....

✞ பணித்தளத்தில் 40 நாள் உபவாச காலங்களில் ஆவியானவர் அளவில்லாமல் விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் மேல் ஊற்றப்பட ஜெபியுங்கள்....

✞ மூன்று மாநிலங்களிலும் சபைகள் ஸ்திரமாகவும், ஒழுங்காகவும் இருந்து, திருமணம், இறப்பு பதிவுகள் மற்றும் கணக்கு வழக்குகளில் சிறப்பாக செயல்படவும் ஜெபியுங்கள்....

✞ புதிதாக கட்டப்படவுள்ள 50 கிராம ஆலயங்கள் தடையின்றி தேவைகள் சந்திக்கப்பட்டு கட்டப்பட ஜெபியுங்கள்...

✞ இந்த மாதம் புதிதாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள 40 சுதேச ஊழியர்களுக்காகவும் சரியான ஊழியர்களை தேர்ந்தெடுக்க ஆவியானவர் வழிநடத்தவும், அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவும் ஜெபியுங்கள்...

✞ இந்த மாதம் பணித்தளத்தில் நடைபெறுகின்ற ஊழியர் கூடுகை, மூப்பர் கூடுகை, மற்றும் பயிற்சி முகாம்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்...

✞ மேமாதம் நடைபெற உள்ள CBC க்காக தாயாரிக்கப்பட்டு வருகின்ற பயிற்சி புத்தகங்கள் சிறப்பாக தயாரிக்கப்படவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்...

✞ நம் பாரத தேசத்தில் நடைபெறவுள்ள தேர்தலுக்காக ஜெபியுங்கள்...

✞ சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை தேவன் இன்னும் அதிகமாய் ஊழியத்தில் பயன்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான ஞானம், சுகம், பெலன் மற்றும் பாதுகாப்பை தேவன் தரவும் ஜெபியுங்கள்...

✞ பணித்தள அலுவலகம், Training Unit மற்றும் தூத்துக்குடி தலைமை ஆலுவலகம் ஆகியவற்றில் பணிபுரியும் தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்...

✞ ஷாலோம் ஊழியத்தின் முன்னேற்றப் பணிக்காகவும், ஊழியத்தை ஜெபத்தாலும் பொருளாலும் தாங்கக்கூடிய அநேக ஆதரவாளர்களை தேவன் எழுப்பித்தரவும் ஜெபியுங்கள்...

✞ ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கிவரும் தேவ ஜனங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்....

✞ ஷாலோம் ஊழியத்தின் ஊழியர்கள், சபைகள் மற்றும் விசுவாசிகளுக்காக ஜெபியுங்கள்...

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண் (Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

* தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
* M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
* D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
* இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
* வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி


Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# ஹென்றி மார்ட்டின்

மிஷனெரி முன்னோடிகள்



ஹென்றி மார்ட்டின் இங்கிலாந்து தேசத்திலுள்ள கார்ன்வல் என்ற இடத்தில் 1781ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தை பெருஞ்செல்வந்தரான வியாபாரி ஆவார். எனவே சகல வசதிகளையும் உடையவராக இருந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் பயின்ற இவர் கணிதத்தில் முதல் மாணவரானார். தன் தந்தையின் மரணத்திற்குப் பின் ஆண்டவரை தேட ஆரம்பித்தார். இவரது சகோதரியின் ஜெபமும், டேவிட் பிராய்னார்ட், வில்–யம் கேரி போன்ற மிஷனெரிகளின் வாழ்க்கையும் இவரைத் தொட்டது. தானும் ஒரு மிஷனெரியாகச் செல்ல வேண்டுமென வாஞ்சை கொண்டார்.

தன்னையும் ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்து, அதற்காக தினமும் பலமணி நேரம் ஜெபித்து வந்தார். அவர் திருமணம் செய்ய விரும்பிய –டியா என்ற பெண், மிஷனெரியாக வர விரும்பவில்லை என்றதும் திருணத்தை கைவிட்டு விட்டு, தான் மட்டும் செல்ல தீர்மானித்தார். 1805ல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனயின் போதகராக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தனது 24வது வயதில் 9 மாத கப்பல் பயணத்திற்குப் பின் கல்கத்தா வந்து சேர்ந்தார். அங்கு டேவிட் பிரவுன்வுடன் தங்கி இருந்தார். ஒரு நாள் தெய்வ சிலைகளை தேரோட்டமாக இழுத்துவரும் பெருங்கூட்ட மக்களை பார்த்தார். அத்தேரின் சக்கரத்தில் ஒரு சிறுவன் விழுந்து நசுங்கியபோது, மார்ட்டின் நிறுத்துங்கள் என கூறினார். ஆனால் ஒருவரும் அதை கண்டுகொள்ளவில்லை. அப்படியே சில பெரியவர்களும் நசுங்கி தங்களை ப–யாக்கிக் கொண்டதைப் பார்த்து அதிர்ந்து போனார். உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும் கண்டு இந்த மூடபழக்கத்தி–ருந்து மக்களை மீட்க பாரத்தோடு ஜெபித்தார். அதற்கு ஒரே வழி வேதம் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதுதான் என்பதை அறிந்தார். அதற்கென வங்காளம், சமஸ்கிருதம், பாரசீகம், அராபிய மொழிகளைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். பாட்னாவில் அரசாங்க சபை போதகராக இருந்துகொண்டு மாலை நேரங்களில் வேதாகமத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். அதோடு வேதத்தை கற்றுக்கொடுக்க, சிறுபிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பள்ளிகள் அமைத்து எழுதப்படிக்க கற்றுக் கொடுத்தார்.

பல மைல்கள் தெருவில் நடந்து சென்றே ஊழியம் செய்தார். அவரது உயர் அதிகாரிகள் நீங்கள் இப்படி அதிக வெப்பமான கால சூழ்நிலையில் தெருவில்

நடக்கக்கூடாது. அப்படி நடப்பது வெள்ளையரான உமக்கு தகுதியல்ல என்று கூறினர். அதற்கு மார்ட்டின் என் ஆண்டவர் நடந்து சென்றே ஊழியம் செய்தார். நான் அவருடைய ஊழியன் மட்டுமே என்று கூறுவார். அன்றிருந்த 60 மில்-யன் இந்திய மக்களுக்கு இந்த நற்செய்தி கிடைக்க வேண்டும் என்ற பாரம் உடையவராக இரவு நேரங்களில் வேதாகமத்தை இந்தியில் மொழிபெயர்க்க ஆரம்பித்தார். அவருடைய கடுமையான உழைப்பினால் இந்தியில் புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டது.

ஒரு முறை 400 பிச்சைக்காரர்களை அழைத்து அவர்களுக்கு நற்செய்தி அறிவித்தார். தீனாம்பூரில் 5 பள்ளிகளை நிறுவினார். 1806 ஆம் ஆண்டு இவரது முயற்சியால் ஒரு ஆலயம் கட்டப்பட்டது. ஜெப புஸ்தகத்தையும் இந்தியில் மொழிபெயர்த்தார். அதற்கு பின்பு அராபிய மொழியில் வேதம் இருந்தால் அராபியர், பாரசீகர், சீரியர், சீனர், ஆப்ரிக்க மக்களின் பெரும் பகுதியினருக்கும் சுவிசேஷம் எளிதாக செல்ல முடியுமே என்று பாரமுடையவராக அராபிய பாரசீக மொழிகளைக் கற்று அதில் வேதத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். ஆராபிய, பாரசீக மொழிகளைக் கற்று 18 மாதங்களில் புதிய ஏற்பாட்டை அராபிய, பாரசீக மொழிகளில் மொழி பெயர்த்தார். அவருடைய கடின உழைப்பும், இந்திய தெருக்களின் புழுதியும், வெப்பமும் இவரது நுரையீரலை பாதித்ததால் அதிகமாக பலவீனமடைந்தார். மருத்துவ ஆலோசனைப்படி இவர் தாய்நாடு செல்ல வேண்டும் என்று கூறினர். ஹென்றியோ தாயகம் செல்ல விரும்பாமல், தாம் மொழிபெயர்த்த பாரசீக புதிய ஏற்பாட்டை அம்மக்களுக்கு கொடுக்கவும், அதை திருத்தம் செய்யவும் தாம் பாரசீகம் செல்ல வேண்டும் என தெரிவித்தார். மருத்துவர்கள் அது நரகத்தை போன்ற வெப்பமுடையது; அங்கு நீங்கள் வாழவே முடியாது என கூறிவிட்டனர்.

ஆனால் இவரோ பெர்சியாவை நோக்கிப் பயணமானார். பெர்சியாவிற்கு வந்தபோது அங்குள்ள கொடூரமான வெயி-ன் காரணமாக ஹென்றிக்கு தலைவ- ஏற்பட்டது. அங்கு புஷ்ஷிர் என்ற இடத்தை அடைந்து பெர்சியாவின் பண்டிதரிடம் தனது புதிய ஏற்பாட்டைக் கொடுத்தார். அங்குள்ள வெப்பம் சிலவேளைகளில் 126 டிகிரியாக இருந்தது. ஷிராஜ் என்ற மலைப்பாங்கான இடத்தில் தங்கி 1811ஆம் ஆண்டு கடுமையான உழைப்பால் பாரசீக மொழியில் புதிய ஏற்பாட்டை திருத்தம் செய்து வெளியிட்டார். பெர்சிய வேதாகமத்தை பெர்சியாவின் அதிபரான ஷாவிடம் கொடுத்து ஒப்புதல் பெற விரும்பினார். 600 மைல் தொலைவிலுள்ள அதிபர் இருக்கும் இடமான டெகரான் என்ற இடத்திற்கு 30 நாட்கள் பயணம் செய்து அவ்விடத்தை அடைந்தபோது அதிபரை பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. பிரிட்டிஷ் தூதுவரிடம் கொடுக்க அனுமதி பெற்றுக்கொண்டு, மேலும் 400 மைல் தொலைவிலுள்ள டெப்பிரிட்ஜ் என்ற இடத்திலுள்ள பிரிட்டிஷ் தூதுவரை சந்தித்து பாரசீக புதிய ஏற்பாட்டை ஒப்படைத்தார். அதிகமான பலவீனத்தால் பாதிக்கப்பட்ட மார்ட்டின் இங்கிலாந்து திரும்ப முயற்சித்தபோது கான்ஸ்டாண்டி நோபிளி-ருந்து 250 மைல் தூரத்திலுள்ள தோகட் என்ற இடத்தில் தனது 31வது வயதில் 1812ஆம் ஆண்டு தேவனுடைய ராஜ்ஜியம் சென்றடைந்தார்.

## நினைவுப்படுத்துகிறோம்......

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.

---


**FORM IV**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of it’s Publication | : | Monthly |
| 3. | Printer’s Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher’s Name | : | V. Devadoss |
| 7. | Address | : | 5/168, Caldwell Colony,<br>3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor’s Name | : | V. Devadoss |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 30.03.2008

sd

signature of Publisher

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ அத்துடன் மறவாமல் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## பணித்தளத்திற்கு இசைக்கருவி தேவை!

***வளர்ந்து வரும் நம் ஷாலோம் ஊழியங்களில் பாடல்களின் மூலம் தேவனை மகிமைப்படுத்துவதற்காக...***




- ஊழியர் கூடுகை,
- மூப்பர்கள் கூடுகை,
- பெண்கள் முகாம்,
- வா–பர் முகாம்,
- நற்செய்திக் கூட்டங்கள்,
- ஞாயிறு ஆராதனைகள்,
- சிறுவர் முகாம்,
- உபவாச ஜெபம்,
- முழு இரவு ஜெபம்

மற்றும் பல ஊழியங்களில் பயன்படுத்தவும், மேலும் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலுக்காக ஹிந்தி, பீ–, பிலோடி மற்றும் பாகுடி மொழிகளில் பாடல்கள் பாடி பதிவு செய்து ஆடியோ கேசட்கள், C.D.-க்கள், மற்றும் V.C.D.-க்கள் வெளியிடவும், KORG கம்பெனி KEY BOARD பணித்தளத்திற்குத் தேவைப்படுகிறது. தயவு செய்து இந்த தேவை ஏறத்தாள ரூ. 35,000/– கிடைக்கப்பெற ஜெபியுங்கள். ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் உதவ முன் வாருங்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

***எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். சங்கீதம் 150:3***


## நாட்டு நடப்புச் செய்திகள்....

அசாம் மாநிலம் தேஜ்பூரில் உள்ள பர்காத் போலீஸ் நிலையத்தில் கடந்த மார்ச் 15ம் தேதி வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்தது. உடனே அங்கு ராணுவத்தினர் சென்று வெடிகுண்டை கண்டுபிடித்து செயல் இழக்கச் செய்தனர், இதனால் பெரும் உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதம் தவிர்க்கப்பட்டது.

பாகிஸ்தானில் முஷரப் ஆட்சியில் 2007ம் ஆண்டு நெருக்கடி நிலமையை அமல்படுத்தியபோது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இப்திகார் முகமது சவுத்ரி மற்றும் நீதிபதிகள் நெருக்கடி நிலமையை அமல்படுத்த தடை விதித்தனர். இதற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்ட தலைமை நீதிபதி சவுத்ரியை மீண்டும் அதே பதவியில் அமர்த்துவதாக 16.03.2009 அன்று பாகிஸ்தானின் தற்போதைய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 16 முதல் மே 13 வரை ஐந்து கட்டமாக தேர்தல் நடைபெறும், தமிழகம் முழுவதும் மே 13ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும். மே 16ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.

ஜப்பானில் தோஷபா என்ற நிறுவனம் “அப்ரிஅட்டென்டா” என்ற பெயரில் வீட்டு வேலைகளைச் செய்யும் ரோபோவை டேக்கியோவில் அறிமுகம் செய்துள்ளது. இந்த ரோபோ தேவைக்கு ஏற்றார்போல் ஒரு அடி வரை தன்னை உயர்த்திக் கொள்ளும் திறன் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் மார்ச் 10 தேதி அக்குரசாவில் விடுதலைப் பு–கள் நடத்திய மனித வெடிகுண்டு தாக்குத–ல் 15பேர் உடல் சிதறி இறந்தனர். குண்டு வெடித்த இடத்தில் அநேக வாகனங்களும் சேதமடைந்துள்ளன. இதில் மூன்று அமைச்சர்கள் உட்பட 36பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

– நன்றி தினகரன்

# அம்பளிபாடா (இராஜஸ்தான்) கிராம ஆலயம்



இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் அம்பளிபாடா கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமம் நகரத்திலிருந்து மிகவும் உள்ளடங்கிய மலைப்பாங்கான கிராமமாகும். இங்கு வாழும் மக்களின் தொழில் சாராயம் காய்ச்சிக் குடிப்பதும், திருடுவதுமாகும். இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறியாது, இறந்த ஆவிகளை தெய்வமாக வணங்கும் மூடப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள். இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்களில் ஒருவர்தான் சகோ. வாக்ஜி நினாமா.

சகோ. வாக்ஜி நினாமாவிற்கு திருமணமாகி பல வருடங்களாக குழந்தை இல்லாமல் பல கோயில்கள் மற்றும் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றும் மருத்துவம் பார்த்தும் மற்றும் மந்திர கிரியைகளுக்கு அதிகபணம் செலவு செய்தும் ஒன்றும் பயனளிக்கவில்லை. இந்நிலையில் இவருடன் படித்த ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. காவ்ஜி கட்டாரா–வின் மூலம் இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களைக் கேள்விப்பட்டு 2001ஆம் ஆண்டு மகரதாவில் உள்ள ஷாலோம் ஆலய ஆராதனையில் கலந்து தன்னை முழு மனதுடன் தேவனுக்காக அர்ப்பணித்தார். 2003ஆம் ஆண்டு இவருக்கு ஒரு பெண் குழந்தையைக் கொடுத்து தேவன் ஆசீர்வதித்தார். 2006ஆம் ஆண்டு தேவனுக்கு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் குறுகிய கால வேதாகமப் பயிற்சியும் பெற்றார். தற்போது 22 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழி நடத்தி வருகின்றார். தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்கென்று காணிக்கையாகக் கொடுத்தார். அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Dr. S. சுரேஷ் J. பால் அவர்கள் குடும்பத்தின் சார்பாக அளிக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month




## இராஜஸ்தான், கோய்க்கா
## ஆதிவாசி மாணவர் விடுதி புதிய கட்டிட பிரதிஷ்டை ஆராதனை




Pr. ஏசுதாஸ், (A.G. சபை திருவட்டார்) அவர்கள் ஜெபிக்க, Pr. ஆமோஸ் (A.G. சபை மார்த்தாண்டம்) அவர்கள் கட்டிடத்தை பிரதிஷ்டை செய்கிறார்கள்



புதிய விடுதியில் Pr. ஆமோஸ் அவர்களின் செய்தி



புதிய விடுதியில் சிறுவர்களுக்கான உணவு வேளை

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss